(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2016 |
| Deposition Of Witness for | : | PW11 |
| Name | : | **திரு.மாங்குடி** |
| Father's Name | : | திரு.சொக்கையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **5th February 2026.**

(எதிரிகள் 1, 2, 4, 6, 11 ஆஜர். எதிரிகள் 3, 7, 8, 9, 10 மற்றும் 12 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 5 வது எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.) It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கல்லூரில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு வனத்தோட்ட கழக காரைக்குடி மண்டலத்தில்

குத்தகை ஒப்பந்ததாரராக 2009 முதல் இன்று வரையிலும் பணியாற்றி வருகிறேன். வனத்தோட்ட கழகத்தில் வருடத்திற்கு ஒருமுறை மேற்படி குத்தகைகளில் முந்திரி கொட்டை, தைல மரங்கள் ஏலத்தில் மில்லுக்கு வெட்டியது போக மீதி குச்சிகள் மற்றும் தேவையற்ற கிளைகளை வெட்டி அதை ஏலத்தில் விடுவார்கள். ஏலத்தில் 2009 முதல் ஒவ்வொரு வருடமும் ஏலத்தில் நான் கலந்து கொண்டு ஏலம் எடுப்பேன். இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள்.

**1, 2, 6, 9, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

(மற்ற எதிரிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

1. நான் தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் தற்போதுவரை சுமார் 15 வருடத்திற்கு மேலாக ஏலம் எடுப்பது தொடர்பாக சிறு குத்தகை ஒப்பந்ததாரராக இருக்கிறேனா என்றால் சரிதான். என்னை அலுவலகத்தில் வைத்து போலிசார் விசாரித்தபோது ஏலத்திற்கு காரைக்குடி வனத்தோட்டகழக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் யாருக்கும் லஞ்சமாக பணம் கொடுக்கவில்லை என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

2. வனத்தோட்டகழக அதிகாரிகள் யாரும் என்னிடம் லஞ்சம் கோரியதும் கிடையாது நான் கொடுத்ததும் கிடையாது என்றால் சரிதான். வனத்தோட்ட கழகம் சார்பாக பெட்டி கான்ட்டிராக்டர்கள் பல்பு எடுப்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான், அடிக்கட்டையை கட்டி ஏலம் விடுவார்கள் அதை எடுப்பது குறித்து மட்டும் தான் எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.02.05 14:59:13 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.